முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1397

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.07.2023, வியாழக்கிழமை

1. ஓங்கார மகாசூட்சுமமே
ஓங்கார ஞானத்தின் ரகசியமே
ஓங்காரமாய் உலகமெங்கும் மாதர்மசக்தியை
உயர்வுபட செய்து அருளுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 11 ம் நாள், 27.07.2023, வியாழக்கிழமை)
வரங்களாக உன் தர்மம்
வையகத்தை முழுமைபட ஆட்கொண்டுவர
3. வருகவே உன் பேரில் நடக்கும்
வல்லமையான தர்மத்தை ஆறுமுகன் யான்
பெருமைகொண்டு காத்து வருகின்றேன்
பேருலகமெல்லாம் வளர்த்தும் வருகின்றேன்
4. வருகவே தர்மசக்திகொண்டே
வையகத்தை மாற்றும் ஒரே தவசி நீ
தருகின்ற மக்களையும் காப்பதோடு
தக்கதொண்டாற்றும் மக்களையும் உயர்த்தி நீ
5. உயர்த்தியே உன் சேவை தொடர்புகொண்ட
உலகோர் அத்துனைபேருக்கும் ஞானத்தை
தயவாக வழங்கி ஞானிகளாக்கி
தரணியே அவர்களைக்கொண்டு மீட்கின்ற
6. மீட்கின்ற அற்புதத்தை அரங்கன் நீ
முழுமைபட இந்த பேருலகில் தவசக்தியாக செய்துவர
வருகவே அரங்கன் உன்நோக்கம்
வடிவேலன் என் ஆசியோடு அரங்கேறும்

7. தருகின்ற மக்களெல்லாம் உன் படை தளபதிகளாக
தரணி எங்கும் நிரம்பி ஞான சமூகம் அமைக்கும்
ஞானவான்களாக ஞானிகளாக ஞான ஆட்சிகொண்ட பூமியாக
இந்த உலகை ஆறுமுகன் யான் அரங்கன் உமக்காய் மாற்றி அருள்புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—